வெளிச்சத்தில் இருட்டின் வாசனை / இந்திரன்
----------------------------------------------------------
நள்ளிரவு நெடுஞ்சாலையின் இருட்டில்
தவம் செய்யும் ஐந்து நட்சத்திர ஓட்டலின்
ரத்த நாளங்களில் வெளிச்சம்
பாதரசமாய் வழிந்தோடுகிறது.
புற்கள், பூக்கள் , கல்வாழைச் செடிகள், கண்ணாடிக் கதவுகள்
நீச்சல்குளம் , மரப் படிக்கட்டுகள், பளிங்குத் தரைகள் எல்லாமே
வெளிச்சத்தைக் குடித்த போதையில் தடுமாறுகின்றன.
ஒவ்வொன்றாய் வந்தமரும் கவிதையின் வரிகள் போல்
உள்ளே நுழைய நுழைய
என் மீது ஒவ்வொன்றாய் வந்து விழும்
எடையற்ற வெளிச்சம்
ரகசியமாய் என்னக்குள்ளிருக்கும்
விளக்கை ஏற்றி வைத்து விடுகிறது.
நான் இப்போது வெளிச்சமாய் இருக்கிறேன்
இருட்டின் அபூர்வ வாசனையை நுகர்ந்தபடி. --- 18-11-2019